2013 மார்ச் 27] [திரு. அ. சவுந்தரராசன்]

முயற்சி எடுத்து நடத்தி, மத்திய அரசாங்கம் இன்னின்ன செய்ய வேண்டும் என்கிற ஒரு தீர்மானத்தை, ஒரு வழிமுறையை, ஒத்துவரக்கூடிய முதலமைச்சர்கள் மூலமாக எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக அந்த முயற்சி எடுத்தால், அது பலன் அளிக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே முன்னாள் மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு அவர்கள் இந்த முயற்சியை எடுத்துள்ளார்கள்.

கடைசியாக மின்சாரம். மின்சாரத்தைப் பொறுத்தவரையில் நேற்றுகூட மதுரையிலிருந்து சொல்கிறார்கள், 13 மணி நேரம் மின் வெட்டு என்று. ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை மின்சாரம் போய் விடுகிறது என்கிற குறையை அவர்கள் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் இங்கிருந்து சமாதானம் சொல்கிறார். அந்தச் சமாதானத்தில் எங்களுக்கு ஒன்றும் மாற்றுக் கருத்தெல்லாம் கிடையாது. ஆனால், மக்கள் சமாதானம் அடைய மறுக்கிறார்கள். அவர்கள் துன்பம் அப்படி. அவர்களை சமாதானப்படுத்துவதற்கு உரிய விரைவான நடவடிக்கைகளையும் நாம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28–3–2013) வியாழக்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3–51 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

44. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பில் திருத்தங்கள் செய்தது குறித்து 27–5–2011 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./SC/7–27–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

[2013 *மார்ச்* 27

*45. 2011–2012 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*ஏதுமில்லை*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS